1971 டிசம்பர் 17]

புதுசட்டக் கல்லூரி

* 496 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரைப் பல்கலைக் கழகத்தோடு இணையும் சட்டக் கல்லூரி ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கணபதி : சட்டக் கல்லூரி ஒன்றை மதுரைப் பகுதியில் ஏற்படுத்தி விட்டால் அங்குள்ளவர்கள் இங்கே வந்து படிக்கிற இடையூறு அகற்றப்படும் என்பதைக் கருதியாவது மீண்டும் அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது பற்றி இரண்டு மூன்று முறை பரிசீலிக்கப்பட்டது. 1970-71-இல் பரிசீலிக்கப்பட்டு நிதி காரணமாக கைவிடப்பட்டது. பிறகும் அதுபற்றி பரிசீலனை வந்து கைவிடப்பட்டது. இடையே சட்டக் கல்லூரி மாணவர்கள் 200 பேர்கள் தூதுக் குழுவாக வந்து இந்த ஒரு கல்லூரியில் படித்து வெளிவருகிறவர்களுக்கே வேலை கிடைக்காமல் இருப்பதனால் மற்றொன்றை ஏற்படுத்த வேண்டாம் என்று கோரினார்கள். அப்படியே மதுரையில் ஒரு பல்கலைக் கழகம் ஏற்பட்டிருப்பதால் அங்கே ஒரு சட்டக் கல்லூரி ஏற்பட்டாக வேண்டும் என்கிற நிலை வந்தாலும் கூட சென்னை சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அங்கே ஏற்படுத்த வேண்டும் என்பதும் பரிசீலிக்கப்பட்டது. இந்த ஆண்டு அங்கே சட்டக் கல்லூரி ஏற்படுத்துவதுபற்றிய செயற்குறிப்பு இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்த ஆண்டு சட்டக்கல்லூரி அட்மிஷனுக்குத் தேர்வுகுழு ஒன்று வைக்கப்பட்டதே, நெருக்கடி காரணமாகவா அல்லது எந்த அடிப்படையில் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் வந்த காரணத்தினால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டது.

திரு. க. சுப்பு : சட்டக்கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு ஒரு புதிய விடுதி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்களே, அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த விடுதிக்கான நிலம் கையகப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. நிலம் எடுத்தவுடன் விடுதி கட்ட முயற்சி மேற்கொள்ளப்படும்.

மாவட்டத் தலைநகரங்களில் நூலகங்கள்

* 497 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் பெரிய நூலகம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?